சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

முதலாந் தவணை -2021

வரலாறு தரம் -10

தயாரிப்பு : திருமதி.S.சுஜிதா ( கே / தெஹி / களனி த.வி )

01)பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1.புராதன காலத்தில் நாட்டை ஆட்சி செய்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

2.ஒரு நாட்டின் நிர்வாகத்தை கொண்டு நடாத்தும் மூன்று ஸ்தாபனங்களும் எவை?

3.நாட்டிற்குத் தேவையான சட்டத்தை உருவாக்கும் சபை எது?

4.சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறை எது?

5.சட்டத்தை மீறுவோரை தடுத்து சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பினைத் தவிர்த்து நாட்டு மக்களுக்கு தீர்வு வழங்கும் துறை எது?

6.கி.பி 9ம் நூற்றாண்டு கல்வெட்டுக்களில் சட்ட நிர்வாகத் துறைகள் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது? அக் கல்வெட்டு எங்கு காணப்படுகின்றது?

7.''எக்தென் சமிய'' என்பது எச்சொல்லில் இருந்து உருவானது?

8.''ஏக ஆஸ்தான சாம்ய'' என்பதன் பொருள் யாது?

10.''வத்ஹிமியின் வதால'' என்பதன் பொருளைக் குறிப்பிடுக.

11.புத்தன்னே ஹெல எனும் இடத்தில் காணப்பட்ட கல்வெட்டு எது தொடர்பான விடயங்களை உள்ளடக்கியது?

12.கி.பி 9ம் நூற்றாண்டுக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளபடி அரசாங்கக் காணி ஒன்றை பௌத்த விகாரைக்கு அன்பளிப்புச் செய்வதற்கு வருகை தந்த சிலர் பிரதிநிதித்துவப்படுத்திய இடம் எது?

13.அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த குருமஹத்தமன எனும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாது?

14.குருமஹத்தமன கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சபாவையைப் பிரதிநிதித்துவப்படுத்த வந்த அதிகாரிகள் இருவரும் யாவர்?

15.சபாவ என்பது எதனைக் குறிக்கின்றது?

16.நீதிமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்களின் வருகை ஏன் கட்டாயமானது?அவ் அதிகாரிகளின் பொறுப்பு யாது?

17.சபாவ எனும் சொல் இலக்கிய மூலாதாரங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

18.''மஹலே'' எனும் சொல் எப்பதவியைக் குறிக்கின்றது?

19.பதிவாளர் நாயகம் எனும் அரச செயலாளர்களின் பொறுப்பு யாது?

20. மெதிரிகிரியவில் அமைந்திருந்த எத்வெஹர எனப்பட்ட தூபிமனைக்கு இரண்டாம் சேனனின் ஆணைப்படி காணியை வழங்கி அது தொடர்பான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வந்ததாக குறிப்பிடப்படும் பதிவாளர் நாயகம் யார்? அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

02)பின்வரும் படம் தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.



I.இது எவ் நூற்றாண்டு கல்வெட்டில் பொறிக்கப்பட்ட குறியீடாகும்?

II.விசிறிஇ கொடி போன்ற அடையாளத்தின் மூலம் காட்டப்படும் விடயம் யாது?

III.அன்னக் குறியீடு வெளிக்காட்டும் அம்சம் யாது?

IV.சந்திரப் பிறை வெளிப்படுத்தும் விடயம்யாது?

V.நாயும் காகமும் வெளிப்படுத்தும் விடயம் யாது?